1981 ஜனவரி 31]

60 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப் பட்டுள்ளது. ஆகவே, வருகின்ற காலகட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலை சாலை அபிவிருத்தித் திட்டமாக இது எடுத்துக் கொள்ளப்படும்.

பெரியாற்றின் குறுக்கே உள்ள பாலம்.

*வினா எண். 134—திரு. ஆர். டி. கோபாலன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா:

பெரியாற்றின் குறுக்கே கம்பத்தை சுருளிப்பட்டியுடன் இணைக்கின்ற பாலத்தை அகலப்படுத்தி பஸ் போக்குவரத்திற்கு ஏற்பாடு செய்யும்பணி எப்பொழுது துவங்கும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தற்போது இப் பணியின் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

திரு. ஆர். டி. கோபாலன்: தலைவரவர்களே, பிரசித்திபெற்ற சுருளி நீர்வீழ்ச்சியைப் பார்க்க சுற்றுலாப் பயணிகள் 20 கிலோ மீட்டர் தூரம் அதிகமாக இப்போது செல்ல வேண்டியிருக்கிறது. நாள்தோறும் நூற்றுக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, அமைச்சரவர்கள் இதைப் பரிவோடு பரிசிலித்து சீக்கிரமாக பணியைச் செய்து முடிக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, ஏற்கெனவே அங்கே ஒரு குறுகிய பாலம் இருக்கிறது. அதன் அகலம் 3.85 கிலோமீட்டர் அளவுக்கு இருக்கிறது. இதை ஒரு உயர்மட்ட பாலமாக ஆக்குவதற்கு ஏறத்தாழ 8 இலட்சம் ரூபாய் செலவாகும். இப்போது நிதிநிலை சரியில்லாததால், நிதிவசதியைப் பொறுத்து பின்னர் கவனிக்கப்படும்.

திருச்சி-கரூர் நெடுஞ்சாலை.

*வினா எண். 135—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:

(அ) திருச்சி-கரூர் நெடுஞ்சாலையை (நாகப்பட்டிணம்-கடலூர் சாலை) அகலப்படுத்தும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

(அ). இல்லை.

(ஆ). இக் கேள்விக்கு இடமில்லை.

[1981 ஜனவரி 31

திரு. எம். சின்னசாமி: தலைவரவர்களே, இந்தச் சாலை திருச்சியிலிருந்து கரூர் வரை 80 கிலோமீட்டர் தூரம் இருக்கும். திருச்சியிலிருந்து கரூர் செல்லும்வரை குறுகிய அகலமுடைய சாலையாக இருக்கிறது; பழுதடைந்தும் இருக்கிறது. அதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. இந்தக் கருத்தை மனதிற்கொண்டு அடுத்த ஆண்டிலாவது இதை அகலப்படுத்த அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, ஏற்கெனவே இந்தச் சாலை ஒரு முக்கியமான சாலையாகும். இது நாகப்பட்டினம்—கடலூர்—மைசூர் சாலை. இது இரண்டு வண்டிகள் போகக்கூடிய அளவுக்கு அகலமுள்ள சாலை. ஒருசில இடங்களில் மட்டும், அதாவது கிலோமீட்டர் 142/2, 4, 6, 8 என்ற அந்தப் பகுதிகளில் மட்டும் குறுகிய சாலையாக இருக்கிறது. இதைக் கவனத்திற்கொண்டு அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, ஏதோ ஒன்றிரண்டு இடங்களில் தான் அந்தமாதிரி குறுகிய இடம் என்று சொல்கிறார்கள். அது சரியல்ல. அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதற்குக் காரணம் கரூர்—திருச்சி பாதையில் வளைவுகள் அதிகமாக இருப்பது ஒன்று; மற்றொன்று சாலை ஓரத்தில் வாய்க்கால் ஒன்று ஓடுகிறது. கொஞ்சம் தவறினாலும் அந்த வாய்க்காலில் விழும் அபாயம் இருக்கிறது. ஆகவே, மக்களுடைய இன்டரெஸ்டைப் பாதுகாக்கின்ற வகையில், விபத்துக்களைத் தடுப்பதற்காக ஒன்றிரண்டு இடங்கள் அல்லாமல் 'ஹோல் செக்ஷனையும்' அகலப்படுத்தி, செம்மைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, இது ஒரு முக்கியமான சாலை என்பதை ஏற்கெனவே இந்த அரசு கருத்திற்கொண்டிருக்கிறது. வலப்பக்கம் காவேரி ஆறும், இடப் பக்கம் பாசன வாய்க்காலும் ஓடுகின்றன. அதனால்தான் அகலப் படுத்துவதில் சிரமம் இருக்கிறது என்பதையும் கவனிக்க வேண்டும். ஆகவே, ஒருசில இடங்களில் இந்தப் பணியைச் செய்ய ஏறத்தாழ 16.5 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. நிதிநிலை சரியான உடன் இது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

(முற்பகல் 10-00)

திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்தச் சலையின் ஒரு புறத்திலே காவிரியும் மற்றொரு புறத்திலே வாய்க்காலும் ஓடுகின்றன என்றும் ஆகவே அதை அகலப்படுத்துவதிலே பிரச்சினைகள் இருக்கின்றன என்றும் சொன்னார்கள், ஆனால் அந்தச்

சாலையை முன்பு அமைக்கின்றபோதே காண்ட்ராக்டர்கள் சரியான முறையிலே செய்யாத காரணத்தால்தான் அது மேடும் பள்ளமும் உள்ள சாலையாக இருக்கின்றது. மேலும் அதை அகலப்படுத்துவதற்குரிய வாய்ப்பும் இருக்கின்றது. அங்கே தற்போது 5 நிமிடத்தில் 10 பஸ்கள் போகின்ற நிலைமை இருக்கின்றது. ஆகவே அந்தச் சாலையை அகலப்படுத்த வேண்டியது மிக அவசியமான ஒரு காரியம். மாண்புமிகு அமைச்சரவர்கள் கோவைக்குச் செல்வதற்கு வேறு பாதை இருப்பதன் காரணத்தால் இந்தப் பாதையை...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இங்கு கேள்விதான் கேட்க வேண்டும். அமைச்சரவர்கள் செல்கின்ற பாதை பற்றி எல்லாம் பேசக் கூடாது.

அவையின் அனுமதியோடு கேள்வி நேரம் நீட்டிக்கப் படுகின்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌந்திரராஜன் அவர்கள் குறிப்பிடுவது போன்று அது மிக முக்கியமான சாலை என்பதைக் கவனத்தில் கொண்டிருக்கிறோம். ஆகவே எவ்வளவு தூரம் அதைச் சரி செய்ய முடியுமோ அவ்வளவு தூரம் சரி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா: தலைவரவர்களே, இந்தச் சாலையின் முக்கியத்துவத்தை தான் அறிந்திருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்த முக்கியத்துவத்தை அறிந்து மாநில அரசின் நிதியிலிருந்து இதைச் செய்யமுடியாத காரணத்தால் தேசிய நெடுஞ்சாலைத் திட்டத்தின்கீழ் இதை ஒப்படைத்து இதனை மத்திய அரசு செய்கின்ற வகையிலே நடவடிக்கைகளை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, இந்தச் சாலை மாநில நெடுஞ்சாலை தான், தேசீய நெடுஞ்சாலை அல்ல. ஆகவே மாநில அரசு தான் இதனை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

திரு. எம். சின்னசாமி: பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சாலையின் ஒரு பக்கத்தில் வாய்க்காலும் அடுத்த பக்கத்தில் காவிரியாறும் ஓடுவதாகவும் அதனால்தான் அதை அகலப்படுத்து வதற்கு முடியாது என்றும் சொன்னார்கள். ஆனால் அந்தச் சாலைக்கு அந்தப் பக்கம் ஏராளமான விவசாய நிலங்கள் இருக்கின்றன. ஆகவே பாதையை அந்தப் பக்கத்திற்கு மாற்று வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, இப்போது இருக்கின்ற பாதையைச் சரி செய்யவேண்டும் என்பது தான் கேள்வி. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிப் பாதை போட வேண்டும் என்று இப்போது கேட்கிறார்கள். ஆனால் அப்படி தனிப்பாதை போட வேண்டும். என்றால் அதைப் பின்னர்தான் பரிசீலிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.